RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 234 | ஆகஸ்டு.26 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## 35 அரசுத் துறைகளில் ஏஐ வளர்ச்சியை மேம்படுத்த பயிலரங்குகள்: பழனிவேல் தியாகராஜன் தகவல்



சென்னை, ஆக.26-

தமிழகத்தில் ஏஐ வளர்ச்சியை மேம்படுத்த, 35 அரசுத் துறைகள், 38 புத்தொழில் நிறுவனங்களில் தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு இயக்கம் மூலம் பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: தமிழக தகவல் தொழில்நுட்பத் துறையின்கீழ் இயங்கி வரும் ஐடிஎன்டி மையம், ஐசிடி அகாடமி, எல்காட் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவு (ஏஐ) சார்ந்த புதுமைகளுடன் ஆட்சி நிர்வாகத்தை மேம்படுத்த ரூ.13.93 கோடியில் தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு இயக்கம் கடந்த 2024ல் தொடங்கப்பட்டது. ஏஐ மூலம் சமூக சவால்களை எதிர்கொண்டு, மக்களுக்கு வழங்கும் சேவைகளை மேம்படுத்த இந்த இயக்கம் ஏற்படுத்தப்பட்டது.

38 புத்தொழில் நிறுவனங்கள்: அதன்படி, தேவையான பயிற்சிகளை அளித்து, ஆராய்ச்சிகள், புதுமைகள், திறன் மேம்பாடுகளை ஊக்குவித்து, ஆட்சி நிர்வாகம், மருத்துவம், பாதுகாப்பு உள்ளிட்டவற்றில் எழும் சிக்கல்களுக்கு ஏஐ மூலம் தீர்வு காண்பதற்கான கட்டமைப்பை இந்த இயக்கம் உருவாக்கி வருகிறது. அந்த வகையில், தமிழகத்தில் ஏஐ வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை, ஐசிடி அகா டமி, ஐடிஎன்டி மையம், எல்காட் ஆகியவற்றுடன் இணைந்து 35 அரசுத் துறைகள், 38 புத்தொழில் நிறுவனங்களில் ஏஐ பயிலரங்குகள் நடத்தப்பட்டன.

இதன்மூலம் 30 முக்கிய ஏஐ தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதேபோல, மருத்துவம், வேளாண்மை, கல்வி, மின் ஆளுமை ஆகியவற்றில் ஏஐ மூலம் தீர்வு காணவகை செய்தல், முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து ஏஐ, இயந்திரவியலில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல், தமிழ்நாடு தரவு பகிர்வு தளத்தை மேம்படுத்துதல், திறன் போட்டிகள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் மாணவர்களிடம் ஏஐ திறன்களை வளர்த்தல் போன்றவற்றையும் இந்த இயக்கம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மக்கள் நலனை காப்பதில் தமிழகம் நம்பர் 1 என்பதை உறுதி செய்வோம்

## அதிகாரிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தல்




சென்னை: ஆக.26-

மருத்துவ சேவை வழங்குவதிலும், மக்களின் உடல்நலனை காப்பதிலும் தமிழகம் நம்பர் 1 என்பதை உறுதி செய்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப் பேரவையில் 202526ம் ஆண்டுக்கான சுகாதாரத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமை கடந்த 2ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

அன்றைய தினம் 38 மாவட்டங்களில் 38 இடங்களில் நடந்த முகாம்களில் 44,418 பேர் பயன் பெற்றனர். இரண்டாவது சனிக்கிழமையான 9ம் தேதி 48,046 பேர் பயனடைந்தனர். 16ம் தேதி சனிக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி என்பதால் முகாம் நடைபெறவில்லை. இந்நிலையில், மூன்றாவது வாரமான நேற்று முன்தினம் 38 மாவட்டங்களில் 38 இடங்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடந்த முகாம்களில் 56,245 பேர் பயன் பெற்றனர்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது: நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்களில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்கு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை, மகப்பேறு, இயன்முறை மருத்துவம், பல், கண் மருத்துவம், மனநலம், குழந்தைகள் நலம், நுரையீரல் மருத்துவம் ஆகிய மருத்துவச் சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களை கொண்டு வழங்கப்படுகிறது.

பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன. மூன்றாம் வாரமாக நடந்த முகாம்களில் 56,245 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். மருத்துவ சேவை வழங்குவதிலும், மக்களின் உடல் நலனை காப்பதிலும் தமிழகம் நம்பர் 1 என உறுதிசெய்வோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.






■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக மதுரை மாவட்டம், தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.389 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் இதர கட்டிடங்களை திறந்து வைத்தார்கள் அதனை தொடர்ந்து மதுரையில் தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் புதிய கட்டிடங்களை பார்வையிட்டு மாணவ மாணவிகளுடன் உரையாற்றினார். தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் திருமதி.தேன்மொழி அவர்கள், மதுரை மேற்கு வட்டாட்சியர் திருமதி. செந்தாமரைவள்ளி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## இஸ்ரோவின் ககன்யான் திட்டத்தில் முக்கிய மைல்கல்: விண்கலத்தை தரையிறக்கும் பாராசூட் சோதனை வெற்றி



சென்னை, ஆக.26-

விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பும் விண்கலம் பாதுகாப்பாக கடலில் இறங்குவதற்கான பாராசூட் சோதனை நேற்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதன்மூலம் ககன்யான் திட்டத்தில் முக்கிய மைல் கல்லை இஸ்ரோ எட்டியுள்ளது.

ரஷ்யா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் மட்டுமே விண்வெளிக்கு வீரர்களை அனுப்பி வருகின்றன. இந்த பட்டியலில் 4வது நாடாக இந்தியாவும் விரைவில் இணைய உள்ளது. இந்திய வீரர்களை விண்வெளிக்கு அனுப்ப ககன்யான் என்ற திட்டம் தொடங் கப்பட்டுள்ளது. இந்த திட்டத்துக்காக ஷுபான்ஷு சுக்லா, அங்கத் பிரதாப், அஜித் கிருஷ்ணன், பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர் ஆகிய 4 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஷுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்தில் 18 நாட்கள் தங்கியிருந்துவிட்டு கடந்த ஜூலையில் பூமிக்கு திரும்பினார்.

இதை தொடர்ந்து, ககன்யான் திட்டப்பணிகளை இஸ்ரோ தீவிரப்படுத்தி உள்ளது. முதல்கட்டமாக விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பும் விண்கலம் பாதுகாப்பாக கடலில் இறங்குவதற்கான பாராசூட் சோதனை, ஸ்ரீஹரிகோட்டாவில் நேற்று நடத்தப்பட்டது. இந்திய விமானப் படையின் சினூக் ஹெலிகாப்டர் மூலம் சுமார் 4 கி.மீ. உயரத்துக்கு சிறப்பு விண்கலம் எடுத்துச் செல்லப்பட்டது. ஹெலிகாப்டரில் இருந்து விண்கலம் கீழே பறக்கவிடப்பட்டது. விண்கலம் பூமியை நோக்கிவிரைந்தபோது, சரியான நேரத்தில்3 பாராசூட்கள் விரிவடைந்து கடலில் பாதுகாப்பாக இறங்கியது.

இதுதொடர்பான புகைப்படங்களை சமூக வலைதளங்களில் இஸ்ரோ வெளியிட்டுள்ளது. ‘ககன்யான் திட்டத்துக்காக விண்கலத்தை கடலில் இறக்கும் சோதனை நடத்தப்பட்டது. அப்போது குறித்த நேரத்தில் பாராசூட் விரிவடைந்து விண்கலம் பாதுகாப்பாக கடலில் இறங்கியது. இஸ்ரோ, டிஆர்டிஓ, இந்திய விமானப்படை, கடற்படை, கடலோர காவல் படை இணைந்து இந்த சோதனையை வெற்றிகரமாக நடத்தின’ என்றும் இஸ்ரோ பதிவிட்டுள்ளது. இதுகுறித்து இஸ்ரோ வட்டாரங்கள் கூறியதாவது: ககன்யான் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஆண்டு இறுதியில் ஆளில்லா விண்கலம் விண்ணில் செலுத்தப்படும். அந்த விண்கலத்தில் வயோமித்ரா என்ற ரோபோ விண்வெளிக்கு அனுப்பப்படும்.

2027ம் ஆண்டின் தொடக்கத்தில் எச்எல்விஎம்3 ராக்கெட் மூலம் சிறப்பு விண்கலத்தில் 3 வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப்படுவார்கள். அவர்கள் 7 நாட்கள் விண்வெளியில் தங்கிவிட்டு பூமிக்கு திரும்புவார்கள். இதன் முன்னோட்டமாக விண்கலம் பத்திரமாக கடலில் இறங்குவதற்கான பாராசூட் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் புதிய மைல்கல்லை இஸ்ரோ எட்டியுள்ளது. வரும் 2035ம் ஆண்டில் இந்தியாவின் சார்பில் சொந்தமாக விண்வெளி நிலையம் கட்டப்படும். இந்த நிலையத்தில் இந்திய வீரர்கள் தங்கியிருந்து ஆய்வு செய்வார்கள். வரும் 2040ம் ஆண்டில் நிலவுக்கு இந்திய வீரர் அனுப்பப்படுவார். இவ்வாறு இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொறியியல் கலந்தாய்வு முடிவில் 37,000 இடங்கள் காலி

சென்னை, ஆக.26-

பொறியியல் படிப்புகளுக்கான சேர்க்கை கலந்தாய்வு முடிவில் 37,179 இடங்கள் காலியாக உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் 423 பொறியியல் கல்லூரிகளில் இளநிலை படிப்புகளுக்கு ஒரு லட்சத்து 90,624 அரசு ஒதுக்கீட்டு இடங்கள் உள்ளன. இவற்றை நிரப்புவதற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு நிறைவடைந்த நிலையில் மீதமுள்ள காலி இடங்களை நிரப்புவதற்கான துணை கலந்தாய்வு ஆக. 21ம் தேதி தொடங்கியது. இதில் பங்கேற்க 20,662 மாணவர்கள் தகுதிபெற்றனர். அவர்களில், விருப்பக் கல்லூரியை தேர்வு செய்தவர்களுக்கான இறுதி ஒதுக்கீடு ஆணை நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி, பொதுப் பிரிவில் 7,767 பேர், தொழிற்கல்வி பொதுப் பிரிவில் 165 பேர், 7.5 சதவீத ஒதுக்கீட்டில் 32 பேர் என 7,964 பேருக்கு துணை கலந்தாய்வில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

பொறியியல் கலந்தாய்வு: இறுதிகட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஒட்டுமொத்தமாக ஒரு லட்சத்து 53,445 இடங்கள் நிரம்பியுள்ளன. இன்னும் 37,179 இடங்கள் காலியாக உள்ளன. இந்நிலையில், எஸ்சி, எஸ்டி பிரிவுக்கான கலந்தாய்வு இன்று நடைபெறுகிறது.

மாணவர்கள் மாலை 7 மணி வரை தங்களுக்கான விருப்பக் கல்லூரியை தேர்வு செய்யலாம். அவர்களுக்கு தற்காலிக ஒதுக்கீடு நாளை (ஆக.26) வெளியிடப்படும். அதை உறுதி செய்பவர்களுக்கு 27ம் தேதி இறுதி ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும்.

## பதிவு தபால் சேவையை நிறுத்தி விரைவு தபால் சேவையுடன் இணைப்பு: அக்.1 முதல் அமல் அஞ்சல்துறை தகவல்

சென்னை, ஆக.26-

இந்திய அஞ்சல் துறையில் பதிவு தபால் சேவையை செப்.1ம் தேதி முதல் நிறுத்தி, விரைவு தபால் சேவையுடன் இணைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியான நிலையில், இது தற்போது அக்.1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளதாக அஞ்சல் துறை தெரிவித்துள்ளது.

இந்திய அஞ்சல் துறை சேவை “கம்பெனி மெயில்” என்ற பெயரில் கடந்த 1766ம் ஆண்டு கிழக்கு இந்திய கம்பெனி ஆட்சியில் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரால் தொடங்கப்பட்டது. இது, 1854ம் ஆண்டு டல்ஹவுசி பிரபுவால் சீரமைக்கப்பட்டு, அஞ்சல் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவே அதிகாரப்பூர்வ இந்திய அஞ்சல் துறை தொடங்கப்பட்ட ஆண்டாக கருதப்படுகிறது.

தற்போது, இந்திய அஞ்சல் துறையில் 1.59 லட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் நிலையங்கள் உள்ளன. இதன்மூலம், உலகின் மிகப்பெரிய அஞ்சல் துறையாக இந்திய அஞ்சல்துறை செயல்படுகிறது. இந்திய அஞ்சல் துறை மூலமாக பல்வேறு சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும் நிலையில், இவற்றில் பதிவு தபால் சேவை முக்கியமானதாக இருக்கிறது. பதிவு தபால் சேவை கடந்த 1854ல் இந்திய அஞ்சல் துறையால் அறிமுகப்படுத்தப்பட்டது.

நீதிமன்றம், வங்கி, அரசு துறை சார்ந்த கடிதங்கள் உள்ளிட்டவை பதிவு தபால்கள் மூலம் அனுப்பப்படுகின்றன. முக்கிய ஆவணங்கள், சான்றுகளை அனுப்பும் போது, வாடிக்கையாளர்களின் முதல் தேர்வாக பதிவு தபால்கள் இருக்கின்றன. அதாவது, பதிவு தபால் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவரே பெற முடியும் என்பது இதன் தனிச் சிறப்பாகும். பாதுகாப்பான ஆவண விநியோகத்துக்கு பதிவு செய்யப்பட்ட அஞ்சல் நம்பகமான சேவையாக இருக்கிறது.

இதற்கிடையில், அஞ்சல் செயல்பாடுகளை நவீனமயமாக்கும் நோக்கில், 171 ஆண்டு கால சேவையாக திகழும் பதிவு தபால் சேவையை செப்.1ம் தேதி முதல் நிறுத்தப்பட உள்ளதாகவும், விரைவு தபால் சேவையுடன் இணைக்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியானது.

அதாவது, டிஜிட்டல் விருப்பங்களால், பதிவு செய்யப்பட்ட தபால் பயன்பாடு குறைந்துள்ளதாகவும், மேம்பட்ட கண்காணிப்பு, வேகமான விநியோக நேரம் மற்றும் சிறந்த செயல்பாட்டுத் திறன் கொண்ட விரைவு தபால் சேவையுடன் இணைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பதிவு தபால் சேவையை நிறுத்தி, விரைவு தபால் சேவையுடன் இணைக்கும் நடவடிக்கை அக்.1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளதாக அஞ்சல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, இந்தியஅஞ்சல் துறை அண்மையில் வெளியிட்ட ஒரு சுற்றறிக்கை: முகவரி சார்ந்த விநியோகத்துக்கான அடிப்படை தபால் சேவையாக விரைவு தபால் கடிதம் மற்றும் விரைவு தபால் பார்சல் ஆகியவை இனிமேல் இருக்கும். பதிவு தபால் என்பது விரைவு தபால்களுக்கு மட்டுமே மதிப்பு கூட்டப்பட்ட சேவையாக கிடைக்கும்.

முகவரிதாரருக்கு குறிப்பிட்ட விநியோகத்தை வழங்கும். பிற வகை தபால்களுக்கு பதிவு கிடைக்காது. வளர்ந்து வரும் சந்தை தேவைகள் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இது மாற்றப்பட்டு வரவுள்ளது.

விரைவு தபால் மற்றும் பதிவு உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட சேவைக்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், பொருந்தக் கூடிய கட்டணங்கள் மற்றும் சேவை விதிமுறைகள் அவ்வப்போது துறையால் அறிவிக்கப்படும். இந்த புதிய நடைமுறை அக்.1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, அஞ்சல் துறை அதிகாரிகள் கூறுகையில்,“பதிவு தபால் என்பது சம்பந்தப்பட்டவரிடம் நேரிடையாக விநியோகிப்பது ஆகும். விரைவு தபால் என்பது சம்பந்தப்பட்டவரிடம் முகவரியில் இருப்பவரிடம் கொடுத்துவிடலாம். புதிய உத்தரவு மூலமாக, விரைவு தபாலில், மதிப்பு கூட்டப்பட்ட சேவையாக பதிவு தபால் வழங்கப்பட உள்ளது. தற்போது, விரைவு தபாலுடன் பதிவு தபால் சேவை இணைப்பது மூலமாக, வாடிக்கையாளர்களுக்கு ஒருங்கிணைந்த அஞ்சல் சேவைகள் கிடைக்கும்” என்றனர்.



## சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கால்நடை மருந்தகம் சார்பில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்

சிவகங்கை, ஆக.26-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கால்நடை மருந்தகம் சார்பில் பருத்திக் கண்மாய், சானாவூரணி ஆகிய கிராமங்களில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை, குடற்புழு நீக்கம், மலடு நீக்கம் ஆண்மை நீக்கம், மாடுகளுக்கு அம்மை தடுப்பூசி, நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி, கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் தடுப்பூசி மற்றும் பொது சிகிச்சை அளிக்கப்பட்டது. இம் முகாமில் காளையார் கோவில் கால்நடை மருந்தகம் உதவி மருத்துவர் சிலம்பரசன், மரக்காத்தூர் கால்நடை மருந்தகம் உதவி மருத்துவர் கணேஷ்குமார், மறவமங்களம் கால்நடை மருந்தகம் உதவி மருத்துவர் ஸ்ரீ. ஷாலினி, மருத்துவர் நர்மதா, நடமாடும் கால்நடை மருத்துவர் அருளாந்து, கால்நடை ஆய்வாளர்கள் ரோஸ்லின் செல்வம், கருப்பையா, பராமரிப்பு உதவியாளர்கள் பாலசுப் பிரமணியன், முத்துவேல், வின்சென்ட் சாலமன், ஆவின் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு 343, மாடுள், நாய்கள் 27, கோழிகள் 220, 240 க்கும் மேற்பட்ட வெள்ளாடுகளுக்கு சிகிச்சை அளித்தனர். கால்நடை பராமரிப்பு துணை இயக்குனர் மருத்துவர் கிரிஷா கலந்து கொண்டு தீவன தாது உப்பு கலவையும், சிறந்த கிடேரி கன்றுகளுக்கும், சிறந்த மாடுகள் பராமரிப்பு மேலாண்மை கான பரிசுகளும் வழங்கினார். ஆவின் பால் உற்பத்தி கூட்டுறவு விரிவாக்க அலுவலர் சுப்பிரமணியன், உற்பத்தியாளர்கள் ஜெனிவ், நவநீத கிருஷ்ணன், முத்துலெட்சுமி மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




## தேனி சமையல் ராணி 2025 க்கான சமையல் போட்டி

தேனி, ஆக.26-

தேனி உழவர் சந்தை அருகே உள்ள வசந்த மஹால் எஸ்.எம்.ஜே ஈவன்ட்ஸ், தேனி வைகை அரிமா சங்கம் இணைந்து தேனி சமையல் ராணி 2025 க்கான சமையல் போட்டி நடைபெற்றது இந்த போட்டியில் 50க்கும் மேற்பட்ட இல்லத்தரசிகள் கலந்து கொண்டனர் சிறுதானியங்கள் கொண்டு சமைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் போட்டி நடத்தப்பட்டது இந்த போட்டிக்கு ஷிவிபி ஈவன்ட்ஸ் சாமுவேல் ராஜா தலைமை வகிக்க, ஷிவிபி ஈவன்ட்ஸ்ன் மகேந்திர பாண்டி மற்றும் ஜமுனா உள்ளிட்டோர் முன்னிலை வகிக்க தேனி அரிமா சங்க தலைவர் கணேஷ் செயலாளர் ஸ்ரீதர் பொருளாளர் கணேசன் மற்றும் அன்னம்மாள் கேட்டரிங் இன்ஸ்டிடியூஷன் துறை தலைவர் சுரேஷ்குமார் உள்ளிட்டோர் போட்டியில் பங்கேற்பவர்கள் சமைத்த உணவை பரிசோதனை மேற்கொண்டு வெற்றி பெற்றவர்களை நிர்ணயத்தனார் அதன் அடிப்படையில் சிறுதானிய உணவை சமைத்த வீரபாண்டியை சேர்ந்த சுகன்யா தேனி சமையல் ராணி 2025 பட்டத்தை வென்றார் இரண்டாம் இடத்தை தேனியை சேர்ந்த பாக்கியலட்சுமி மூன்றாம் இடத்தை கம்பத்தை சேர்ந்த காயத்ரி தேவியும் வெற்றி பெற்றனர் வெற்றி பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் கேடயங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது மேலும் கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசு வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## மாநில அளவிலான கபாடி திருவிழா

திருப்பூர், ஆக.26-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் மீனாட்சி புரம் அமரர் ப.பாளையா நினைவாக இளைய நிலா கபாடிக்குழு சார்பில் மாநில அளவிலான கபாடி திருவிழா கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றது.

இதில் மொத்தம் 55 அணிகள் விளையாடின. முன்னதாக தமிழக அரசு காவல் துறை யைப் சேர்ந்த மணி முத்து, அ.இ.அ.தி.மு.க. இளைஞர் அணி நகர துணை செயலாளர் ஆர்.ரகுபதி, உடற் கல்வி ஆசிரியர் ஹபார்த்திபன், ராஜசேகர், தீபன் குமார், சஞ்சய், பரத்,சத்திய பிரியன், மயில் சாமி, ஆகியோர் வரவேற்றனர்.

இதில் வீராட்சிமங்களம் இளந்தமிழன் அணி முதல் பரிசு ரூபாய். 25,000/ மற்றும் வெற்றி கோப்பையையும், இரண்டாம் பரிசு பவானி கே.எம்.கே. குட்டை முனியப்பன் கோவில் அணி ரூபாய் 20,000/ மற்றும் வெற்றி கோப்பையையும் வென்றது.

இந்த பரிசுகளை தாராபுரம் சாரா நர்சிங் கல்லூரி நிறுவனர் மற்றும் கல்வியாளர் டாக்டர் ஜெய்ானி வழங்கி வாழ்த்தினார். முன்னதாக மூன்றாம் பரிசு ரூபாய்.10,000/ மற்றும் வெற்றி கோப்பையை சீரம் பாளையம் செங்குட்டுவன் அணியும், நான்காம் பரிசாக ரூபாய்.10,000/ ம், மற்றும் வெற்றி கோப்பையை மீனாட்சிபுரம் பாளையா நினைவு அணியும் பெற்றன. இந்த மூன்று நாட்களாக நடைப்பெற்ற போட்டிகளின் நடுவர்களாக திருப்பூர் மாவட்ட நடுவர் குழு கன்வீனர் ஏ.சி.சேகர், ஏகேசப்சி என்.சௌந்தரபாண்டியன், எம்.மருதை, எம்.சுதாகர், கே.பாக்யராஜ் ஆகியோர் இருந்தனர்.

இன்று காலை வரையில் போட்டிகள் நடந்து பரிசு அளிப்பு விழா நடைபெற்றது.

### வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

# பெண்களுக்கு சமவாய்ப்பு, சம மரியாதை கொடுக்க வேண்டும்: சென்னை ஐகோர்ட் நீதிபதி பேச்சு

வேலூர், ஆக.26-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, வேலூர் விஐடி பல்கலைக்கழக சுகூட்டரங்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சி, பெண்களுக்கு சமவாய்ப்பு, சமமரியாதையை கொடுக்க வேண்டும் என விஐடி பல்கலைக்கழகத்தில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சென்னை ஐகோர்ட் நீதிபதி கூறினார். சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் வேலூர் மாவட்ட நீதித்துறை சார்பில், பாலின சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளித்தல், பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவுகளை தடுப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி காட்பாடியில் உள்ள வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் நடந்தது. முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி சாந்தி, எஸ்.பி. மயில்வாகனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி இளவரசன் வரவேற்றார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி




புகழேந்தி தலைமை தாங்கி தொடங்கி வைத்து பேசியதாவது: தமிழகம் முழுவதும் மாவட்ட நீதிமன்றங்கள் சார்பில் இதுபோன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த கூட்டத்திற்கு ஆண்களுக்கு சமமாக பெண்களும் வந்துள்ளனர். இந்த மாவட்டத்தில் ஆணும், பெண்ணும் சமம் என்பதை விளக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட காவல்துறையில் உயரதிகாரிகள் உள்ளனர். பிளஸ் 2 தேர்ச்சியிலும் பெண்கள் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதேபோல் யுபிஎஸ்சியில் 1008 பேர் தேர்ச்சி பெற்றனர். அதில் 284 பேர் பெண்கள். முதல் 5 இடங்களில் பெண்கள் 3 இடங்களை பிடித்துள்ளனர்.

ஒரு குடிமகனை சமமாக பாவிக்கப்படுவதுதான் நமது அடிப்படை சட்டம், அரசியல் மைப்பு சட்ட மாகும். நமது நாட்டை நிர்வாகம் செய்வது அரசியல் அமைப்பு சட்டம்தான். அனைவரும் சட்டத்திற்கு உட்பட்டவர்கள்தான்.

கருவிலேயே எதிர்ப்புகளை சந்திப்பது பெண்கள் தான். பாலின அடிப்படையில் கருவில் பெண்ணை கண்டறிந்து அழித்த காலம் உண்டு. அதற்கு உசிலம்பட்டிதான் உதாரணம். சட்டங்கள் இயற்றிய பிறகு பாலின படுகொலைகள் குறைந்தது.

கழிவறை இல்லாததால் பெண்கள் கல்வி கற்காத நிலையும் உண்டு. பெண்களுக்கு சமவாய்ப்பு, மரியாதை என்பதை, மனதளவில் நினைத்து பார்த்தால் நிச்சயம் கொடுப்பதில்லை. அவர்களுக்கு வீட்டுவேலைகளில் சமவாய்ப்பு, மரியாதையை உருவாக்கவேண்டும். திருமணமான பிறகும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையவில்லை. வீட்டிலும் அவர்களுக்கு பிரச்னை உள்ளது.

பெண்கள் வேலை செய்யும் இடங்களில் பயந்து பயந்துதான் வேலை செய்கின்றனர். அவர்களுக்கு நாம் வீட்டில் எடுக்கும் முடிவுகளை வீட்டில் உள்ள பெண்களிடம் கேட்பது போல் வேலை செய்யும் இடங்களிலும் கேட்கவேண்டும். பெண்களுக்கு சமவாய்ப்புகளை கொடுக்கவேண்டும். நமக்கான உரிமைகளையும், தன்னம்பிக்கையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். நமது நாடு பொருளாதார வளர்ச்சியில் 5வது இடத்தில் உள்ளது. இன்னும் முழுமையாக அவர்களின் பங்களிப்பை பயன்படுத்த வேண்டும். இந்திய சுதந்திர போராட்டத்திற்கு வித்திட்ட மாவட்டம் வேலூர் மாவட்டம் ஆகும். இந்த விழிப்புணர்வில் பங்கேற்றவர்கள் இதுகுறித்து மற்றவர்களிடம் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், அரசு அதிகாரிகள், தனியார் நிறுவன ஊழியர்கள் என 600க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## காட்பாடி சன்பீம் மெட்ரிக் பள்ளியில் விளையாட்டு தின விழா

வேலூர், ஆக.26-

வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகா, காட்பாடி மேட்டுக்குளம், சன்பீம் பள்ளி வளாகத்தில் விளையாட்டு தின விழா25, கௌரவ தலைவர் டாக்டர். டி.ஹரிகோபாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.மயில்வாகனன், கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுடன் கல்வினால் ஏற்படும் நன்மைகளை குறித்து சிறப்புரையாற்றினார். டாக்டர் தங்கபிரகாஷ், கௌரவத் தலைவர் டாக்டர். ஜார்ஜ் அரவிந்த், பள்ளியின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.



## டிவிஎம்சிஎச்சில் முழு உடல் பரிசோதனை மையத்தைத் அமைச்சர் திறந்து வைத்தார்

திருநெல்வேலி, ஆக.26-

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 5 கோடி மதிப்பிலான நவீன முழு உடல் பரிசோதனை மையத்தை சுகாதார அமைச்சர் மா.சுப்பிரமணியன் சனிக்கிழமை திறந்து வைத்தார். உடன் அமைச்சர் கே.என்.நேரு, மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஆர்.சுகுமார், டிவிஎம்சிஎச் டீன் சி.ரேவதி பாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் ஒரு நகர்ப்புற சுகாதார துணை மையத்தையும் திறந்து வைத்தார்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 16வது வார்டுக்குட்பட்ட கிறிஸ்து நகர் பிரதான சாலை சிமோன் தெரு மற்றும் ஜோதி தெருவில் ரூ. 4.50 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ். தொடங்கி வைத்தார். உடன் துணைமேயர் மேரி பிரின்ஸி லதா மண்டல தலைவர் .ஜவஹர் மாநகர துணை செயலாளர் வேல்முருகன் மாநகர வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் சங்கர்ராஜா தி மு க நிர்வாகிகள் .ஜனார்த்தனன் ரமேஷ் அனஞ்ச பெருமாள், மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், தி மு க நிர்வாகிகள், பொதுமக்கள் .உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சட்ட விரோதமாக போலியான பட்டா மாறுதல் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பாரா?




காளையார் கோவில், ஆக.26-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் செந்தமிழ் நகரைச் சேர்ந்தவர் சி.முத்துச் செல்வி(55) இவரது கணவரின் பூர்விகமான சொத்தை அய்யனார்குளம் கிராமத்தில் அய்யாச்சாமி மகன் சோனைமுத்து என்பவரின் பெயரில் சட்ட விரோதமாக போலியான பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார் அம் மனுவில்

அனுப்புநர்:

சி.முத்துச்செல்வி, வயது(55).

க.பெ.சோ.சிவாஜி, கதவு எண்.5142, செந்தமிழ் நகர் மேற்கு, காளையார் கோவில், சிவகங்கை மாவட்டம்.

பெறுநர்:

உயர்திரு.மாவட்ட ஆட்சியர் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை.

பொருள்: போலி ஆவணத்தின் மூலம் பட்டா மாறுதல் தொடர்பாக...

மதிப்பிற்குரிய அம்மா.

வணக்கம், நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கணவனால் கைவிடப்பட்டு தனியாக வசித்து வருகிறேன். எனது கணவரின் பூர்வீக சொத்து பட்டா எண்.649. மொத்த பரப்பு 4.60 ஏக்கர் நிலத்தை முத்தார் குருப். அய்யனார்குளம் கிராமத்தில் அய்யாச்சாமி மகன் சோனைமுத்து என்ற பெயரில் உள்ளது. இது தொடர்பாக சிவகங்கை மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.140/2021 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.6750/2025 என்றும் தாக்கலாகி நிலுவையில் இருந்து வருகிறது. மேற்கண்ட சொத்துக்களை முத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.ஜானகி மற்றும் கிராம உதவியாளர் மோகன் மற்றும் தலைமையிடத்து துணைவட்டாட்சியர் திருமதி.லெட்சுமி அவர்களுடன் கூட்டு சேர்ந்து பெரும் கையூட்டல் பெற்று கொண்டு பட்டா எண்.2934 மொத்த பரப்பு. 4.60 ஏக்கர் சோனைமுத்து மகன் ஆறுமுகம் என்பவர் பெயரில் டி.ஆர்.2025/0103/23/248004டி.ஆர், நாள்.08.04.2025 அன்று சட்ட விரோதமாக பட்டா மாறுதல் செய்துள்ளார்கள். நீதிமன்ற வழக்குகளையும், நீதிமன்றத்தையும் அவமதிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ளனர். தனது பதவியின் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி உள்ளனர். இதுதொடர்பாக மேற்கண்ட கிராமநிர்வாக அலுவலர் முத்தூர் குரூப்க்கு பணி தொடங்கிய நாளில் இருந்து எனது ஆட்சேபனை மற்றும் பட்டா எண்.649ல் பிரச்சனைகளில் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாகவும் எழுத்துபூர்வமான புகார் மனுவும் அளித்துள்ளேன்.மேலும் வாய்மொழியாகவும் பலமுறை நினைவூட்டியும் உள்ளேன். எனவே சமூகம் அவர்கள் மேற்கண்ட பட்டா மாறுதல் உத்தரவுவை ரத்துசெய்து இதற்கு துணையாக இருந்த வருவாய்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து எனக்கு நீதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். என்று குறிப்பிட்டுள்ளது இது குறித்து மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முத்துச்செல்வி கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்..



■ கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல்துறையில் அதிவேகமாக சென்று பணியாற்றும் வகையில் 'குயிக் ரெஸ்பான்ஸ் டீம்' வாகனம் இயக்கப்படுகிறது. இதனை கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஸ்டாலின் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். மாவட்டத்தில் எந்த பகுதியில் பிரச்சனை ஏற்பட்டாலும் உடனே அங்கு செல்வதற்கு வசதியாக இந்த வாகனம் ஈடுபடுத்தப்படவுள்ளது.




■ தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் .அன்பில் மகேஷ் பொய்யாமொழி. மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, முன்னிலையில் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமையாசிரியர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு, பேசினார்கள். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி உட்பட பலர் உள்ளனர்.

# VIP செஸ் அகாடமியின் 2வது மாநில அளவிலான சதுரங்க போட்டி தாம்பரத்தில் நடைபெற்றது

தாம்பரம், ஆக.26-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் VIP செஸ் அகாடமியின் 2வது மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் அதன் தலைவர் கோகிலா ராஜேஷ் அவர்களின் ஏற்பாட்டில் தாம்பரம் வள்ளுவர் குருகுலம் பள்ளியில் 24.09.2025 அன்று காலை 9 மணிக்கு தொடங்கியது. இதில் 8, 10, 13, மற்றும் 25 வயதுக்கு உட்பட்ட வீரர்கள் பங்கேற்றனர்.

இந்த போட்டியில் தமிழ்நாட்டில் உள்ள செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், கடலூர், திருவண்ணாமலை, திருவாரூர், மதுரை, திருச்சி, சேலம் போன்ற பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுமார் 350 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியே ஆறு சுற்றுகள் நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட கிழக்கு தாம்பரம்




Dumpling momo house, CEO அனிதா குமாரி மற்றும் ஆனந்தபுரம் ஸ்ரீமதி, VIP Chess அகாடமியின் தலைவர் கோகிலா ராஜேஷ் ஆகியோர் போட்டிகளில் முதல் 30 இடங்களை பிடித்த வீரர்கள் 240 பேர்களுக்கு வெற்றி கோப்பைகளும் பதக்கங்களும் வழங்கி சிறப்பித்தனர். இதில் கலந்து கொண்ட எட்டு வயதுடைய அனைத்து வீராங்கனைகளுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டது மிகவும் சிறப்பாக கருதப்பட்டது . இது இளம் வயது வீரர்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் அமைந்திருந்தது,

போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த பரிசளிப்பு விழாவில் சர்வதேச சதுரங்க நடுவர் பூர்ணிமா பாலா, அகில இந்திய சதுரங்க நடுவர் கார்த்திகேயன், மாநில நடுவர்கள், செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் என ஏராளமானார் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# மாநில அளவிலான யோகாசனப் போட்டி

சிவகங்கை, ஆக.26-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தமிழ்நாடு யோகா கூட்டமைப்பு சார்பாக தமிழ்நாடு அளவிலான யோகாசன போட்டியானது கடந்த 23. 8. 2025 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் வருகின்ற டிசம்பர் மாதம் கேரளாவில் நடைபெறவுள்ள இந்திய அளவிலான யோகாசனப் போட்டியில் பங்கு பெற உள்ளனர். சிவகங்கை மாவட்டம் சார்பாக தமிழ்நாடு யோகா கூட்டமைப்பில் இருந்து 57 மாணவர்கள் போட்டியில் பங்கேற்றனர் தேவகோட்டை, காரைக்குடி, சிவகங்கை பகுதி பள்ளிகளில் இருந்து மாணவர்கள் பங்கேற்றனர். தேவகோட்டை இன்ஃபான்ட் ஜீசஸ், சென் ஜோசப், பஞ்சு வள்ளியப்பா மற்றும் பல பள்ளிகளில்




இருந்து மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். அவர்களுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்பட்டன. இப்போட்டிக்கு தமிழ்நாடு யோகா ஃபெடரேஷன் சிவகங்கை மாவட்ட செயலாளர் "யோகா ஆச்சாரியா" பூ.புவனேஷ் அவர்கள் தலைமையேற்று வழி நடத்தினார். அவர்களைத் தொடர்ந்து யோகா கூட்டமைப்பு உதவிச் செயலாளர் யோகா ஆசிரியர் திரு.பாலமுருகன் மற்றும் பல ஆசிரியர்கள் வழிநடத்தினர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட அனைத்து மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு சிவகங்கை மாவட்ட யோகா கூட்டம் அமைப்பின் செயலாளர் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

# பள்ளி மாணவிகளுக்கான மாவட்ட அளவிலான சிலம்பப் போட்டியில் திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவிகள் வெற்றி

சிவகங்கை, ஆக.26-

சிவகங்கை மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளியின் நான்கு மாணவியர் அவர்கள் பயின்ற பள்ளியின் சார்பாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவியும், திருப்புத்தூர் நாகப்பா மருதப்பா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு பயிலும் மாணவியுமான ப்ரீத்தி இரட்டைக் கம்புப் பிரிவில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று மாநிலப்



போட்டிக்குத் தேர்வானார். மேலும் அதே பள்ளியில் பயிலும், ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவிகள், பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி சர்விகா தொடு வரிசைப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், ஒன்பதாம் வகுப்பு மாணவி நித்ய ஹர்ஷினி மூன்றாம் இடத்தையும், பத்தாம் வகுப்பு மாணவி ஜெயதாரணி மூன்றாம் இடத்தையும் பெற்றனர். சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளியின் ஆசான் நமசிவாயம், பயிற்சியாளர்கள் லதா நமசிவாயம், சுந்தரமூர்த்தி, சுந்தரமணி மற்றும் பெற்றோர்கள் பாராட்டி வாழ்த்தினர்.

## தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில்

# தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந் பிறந்தநாளை முன்னிட்டு கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது

தாம்பரம், ஆக.26-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு பகுதி தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, தாம்பரம் தெற்கு பகுதி கழக செயலாளர் கேட் எம்.தர்மா தலைமையில் 63வது வார்டு வட்டச் செயலாளர் குமார், தெற்கு பகுதி துணைச் செயலாளர் டி.ஏழுமலை, முன்னிலை தெற்கு பகுதி பொருளாளர் லோகு வட்ட அவைத் தலைவர் தேனு, வட்ட பொருளாளர் எம்.கே. பாபு, 64வது வார்டு வட்டச் செயலாளர் கன்னியப்பன் வட்ட அவைத் தலைவர் சங்கர், தெற்கு பகுதி இளைஞரணி செயலாளர் விஷ்ணு 61வது வார்டு வட்ட செயலாளர்



ராசி மகேந்திரன், அவைத்தலைவர் பிரசு ரவி, பொருளாளர் நாகூர் மீரான் ஆகியோர் ஏற்பாட்டில் 5 வார்டுகளிலும் கேப்டன் விஜயகாந்த் பிறந்த நாள் விழா வெகு சிறப்பாக நடைப்பெற்றது.

தாம்பரம் மாநகராட்சி 61வதுவார்டு, 63வார்டு, 64 வார்டு, ஆகிய 5 வட்டங்களிலும் சுமார் 5 இடங்களில் தேமுதிக கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் தொகுதி பொறுப்பாளரும் செங்கப்பட்டு மாவட்ட துணை செயலாளருமான மா.செழியன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா ஆகியோர் கலந்து கொண்டு கேப்டன் அவர்களின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி சுமார் 5 இடங்களில் தேமுதிக கழக கொடியேற்றி வைத்து அதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு 200 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் தேமுதிக நிர்வாகிகள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் சுஜாதா நந்தினி, தெற்கு பகுதி துணைச் செயலாளர் தமிழரசி, மாவட்ட பிரதிநிதி பி.வீரப்பன், பாலமுருகன், தெற்கு பகுதி மகளிர் அணி செயலாளர் டாக்டர் சுமதி, வி.கலா ஆறுமுகம், தெற்கு பகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் எம் திலகா, வி.சேட்டு என்கின்ற தேவேந்திரன், வட்டச் செயலாளர்கள் கன்னியப்பன், எம்.இளங்கோ, ராசி மகேந்திரன், அண்ணாமலை, காந்தி, நிர்வாகிகள் ஏ ஏழுமலை, அசோக், முருகன், சரிதா, கேப்டன் மன்ற செயலாளர் பிரகநாதன், ரகு, குமரேசன், பெருமாள், ஹரிகுமார், கார்த்திக், கார்த்திக், அருண், சந்தோஷ், அரவிந்தன் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# பழனியில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகி சர்க்கரை நோயால் கால்கள் விரல் எடுக்கப்பட்ட நபருக்கு ஒரு மாத மளிகை சாமான்கள் வழங்கினார்

திண்டுக்கல், ஆக.26-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தமிழக வெற்றி கழக மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் மற்றும் நிர்வாகிகள் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த ராமன் என்பவர் சில நாட்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் பின்பு அவர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டது தெரியவந்தது தனது காலில் புண் ஏற்பட்ட காரணத்தால் விரலை மருத்துவர் அகற்றினர் அதனைத் தொடர்ந்து இரண்டு மாத காலத்திற்கு எந்த வேலைக்கும் செல்ல முடியாமல் காரணத்தால் மற்றும் அவர் வீட்டில் வயதானவர்கள் உள்ளனர் அவர்களின் உணவு மற்றும் மருத்துவம் அனைத்தையும் அவர்தான் பார்த்துக் கொள்கிறார். என்ன செய்யப் போகிறோம் இரண்டு மாதத்திற்கு என்று நினைக்கின்ற நேரத்தில் ஓடி வந்து உதவி செய்த தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை சாமான்கள் அரிசி போன்றவைகளை வழங்கினார் பின்பு ராமன் நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்தனர்.



■ தேனி மாவட்டம் போடி வள்ளுவர் சிலை அருகே மறைந்த தேமுதிக தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு தேனி மாவட்ட தேமுதிக தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் போடி தெற்கு நகர கழக செயலாளர் சேது முருகன், போடி வடக்கு நகர கழக செயலாளர் காஜா மைதீன், ஆகியோர் தலைமையில் மற்றும் சதீஸ்குமார் நகர துணை செயலாளர், மகேஸ்வரன் நகர பொருளாளர் (வ), ராஜ்குமார் நகர துணை செயலாளர் (தெற்கு), மாவட்ட பிரதிநிதி மணிமாறன் ,விஜயகாந்த் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மலர்களை தூவி மரியாதை செலுத்தினர்.பின்னர் நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு விஜயகாந்த் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் வகையில் பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கும் உற்சாகமாக கொண்டாடினர்.மேலும் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினர்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர்.அழகுமீனா, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) குருசந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

# தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் வட்ட செயலாளர்கள் அவசர செயற்குழு கூட்டம்

பம்மல், ஆக.26-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் வட்ட செயலாளர்கள் அவசர செயற்குழு கூட்டம் 248 2025 அன்று மாலை 11வது வட்ட கழக அலுவலகத்தில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி அவர்கள் ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் அவர்கள் தலைமையில், வட்ட கழக செயலாளர் எம்.சாலா(எ)சுகுமாரன் வரவேற்புரையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பாடல்லி, மாநகர பிரதி நிதிகள் பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே. ரவிச்சந்திரன், சு.மனோகரன், ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில். காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு,



காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஏ. சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா.செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் பிஎஸ். ரவி, வட்டக் கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், மு.இன்பசேகர், என்.காந்தி, எ எச்.முகமது அப்பாஸ், பி. ஸ்ரீதர், தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதினா பேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் இக்கூட்டத்தில், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் , பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கன்னியாகுமரி மாவட்டம் விரிசடி காலனியில் சாதிவெறி தாக்குதல்கள் விசிக சார்பில் புகார் மனு

கன்னியாகுமரி, ஆக.26-

கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி பேரூராட்சிக்கு உட்பட்ட விரிசடி காலனியில் கடந்த சில நாட்களாக சாதிவெறி தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் நடந்த கொலைவெறி தாக்குதலில் பலத்த காயம் அடைந்த நபர்கள் ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், நேற்று மீண்டும் கையில் கத்தியுடன் சுற்றித்திரிந்த ஜெயபால் என்ற இளைஞரை கண்ட அப்பகுதி பொதுமக்கள் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவலரிடம் தெரிவித்துள்ளனர்.



எனினும் காவலர் அலட்சியமாக "கையில் கத்தியை சும்மா தானே வைத்திருந்தார், உங்களை குத்த ஒன்றும் செய்யவில்லையே" என்று கூறியதாக மக்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர். இதனால் அப்பகுதி மக்கள் தங்களின் உயிர் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த சம்பவத்தை கண்டித்து தென் மண்டல துணை செயலாளர் திருமாவேந்தன் தலைமையில், மகளிர் விடுதலை இயக்க மாநில துணை செயலாளர் கலைச் செல்வி முன்னிலையில் இன்று கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு அளிக்கப்பட்டது.




■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி ஆடிட்டோரியத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி முதல்வர்களுக்கான ஆலோசனை நிகழ்ச்சியில் தமிழ்நாடு பள்ளிக் கல்வி அமைச்சர் . அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு மாவட்ட ஆட்சியர் . ஆர். அழகுமீனா, நினைவுப் பரிசை வழங்கினார்.




# திருப்பூர் மாநகராட்சியை கண்டித்து பாரதிய ஜனதா மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

திருப்பூர், ஆக.26-

திருப்பூர் மாவட்டம் முழுவதும். திறனற்ற மாநகராட்சியின், நிர்வாகத்தை கண்டித்து. திருப்பூர் மாவட்டம் முழுவதும். பாரதிய ஜனதா கட்சியினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் பேசியது, பொது மக்களின் அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்யாத மாநகராட்சி அதிகாரிகள். மற்றும் மேயர் அவர்களையும். வன்மையாக கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். காரணம் திருப்பூர் மாநகரத்தில் உள்ள தூய்மை பணியாளர்களின் பிரச்சினைகளை முடிக்காததால் திருப்பூர் மாநகராட்சி குப்பை மாநகராட்சியாக மாறி உள்ளது. மேலும் ஒவ்வொரு இடங்களிலும் குப்பைகள் அதிகமாக சேர்ந்துள்ளதால் தற்போது அவ்வப்போதும் மழை வருவதால் அந்த மலையில் நனைந்து. பக்கத்தில் இருக்கும் வீடுகளுக்கு துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் பல தெரு நாய்கள் அந்த குப்பைகளை கிளறி விடுவதால் சாலைகளில் குப்பைகள் ஆங்காங்கே பரவி வருகிறது. பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும், திமுக அரசால் பல வரிகளை ஏற்றிக்கொண்டே வருகின்றன . குப்பை வரிகளில் வாங்கும் திருப்பூர் மாநகராட்சி குப்பைகளை முறையாக எடுக்காமல். மாதக்கணக்கில் குப்பைகள் தேங்கி கிடக்கின்றன. இதனால் பக்கத்தில் உள்ளவர்களுக்கு துர்நாற்றம் வீசுவதோடு மக்களின் ஆரோக் கியத்திற்கு அச்சமாக உள்ளது என பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள். மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள். திமுக அரசை கண்டித்து திருப்பூர் மாவட்டம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள்.




காங்கேயநல்லூர் திருமுருக கிருபானந்த வாரியார் பிறந்தநாள் முன்னிட்டு

# திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மலர் தூவி மரியாதை

காட்பாடி, ஆக.26-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங்கேய நல்லூர், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, கிருபானந்த வாரியாரின் திருவுருவ சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி ஆணையர் இலட்சுமணன், 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.கதிரவன், ஏ.பி.ஆர்.ஓ. நந்தகுமார், திமுக பகுதி செயலாளர் பரமசிவம், திமுக பொறுப்பாளர் ஜே.சி.பி.சுரேஷ் மற்றும் பி.ஆர்.ஓ அலுவலக பணியாளர்கள் சுப்பிரமணி, சாந்தலிங்கம், முனிசாமி, சீனிவாசன், குலசேகரன், தரணி மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# காங்கேயநல்லூர் திருமுருக கிருபானந்த வாரியார் ஞானத்திரு வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் மத்திய மாநில அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி

காட்பாடி, ஆக.26-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங் கேயநல்லூர், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் ஞானத்திரு வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப் பட்டிருந்த மத்திய மாநில அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி யினை, மாவட்ட சுப்பு லெட்சுமி பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி ஆணையர் இலட்சுமணன், 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.கதிரவன், ஏ.பி.ஆர்.ஓ. நந்தகுமார், திமுக பகுதி செயலாளர் பரமசிவம், திமுக பொறுப்பாளர் ஜே.சி.பி.சுரேஷ் மற்றும் பி.ஆர்.ஓ அலுவலக பணியாளர்கள் சுப்பிரமணி, சாந்தலிங்கம், முனிசாமி, சீனிவாசன், குலசேகரன், தரணி மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட குழுக்கூட்டம் நடைபெற்றது



திருப்பூர், ஆக.26-

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் சார்பில் மாவட்ட அளவிலான பணிக்குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

தடைசெய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எரியப்படும் நெகிழி கழிவுகள் பயன்பாட்டை தடைசெய்யும் நீதி பேரானை நடைமுறைப்படுத்த சமந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத் திற்குற்பட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேலும், மாதம் ஒருமுறை ஒவ்வொரு தலைப்பின் கீழ் நடைபெறும் மாபெரும் நெகிழி கழிவு சேகரிப்பு நிகழ்வு மற்றும் சுத்தம் செய்யும் நிகழ்வில் உள்ளாட்சி அமைப்புகள் பங்கு பெற்று சேகரிக்கப்படும் நெகிழி கழிவுகளை இணை எரியூட்டு முறையில் அகற்றப்பட வேண்டும். நெகிழி கழிவு மேலாண்மையை திறம்பட செயல்படுத்துவது குறித்தான கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

நெகிழி (பிளாஸ்டிக்) மாசுபாட்டைக் குறைக்க மாவட்ட அளவிலான பணிக்குழுக்கூட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், NCC, NSS, சாரண சாரணியர் இயக்கம், இளைஞர் மன்றங்கள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளை இணைத்து வலுவான மக்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டும். சுற்று சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்கள் பயன்பாட்டை ஊக்குவித்து பரப்புரைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்டத்தில் நெகிழி கழிவு அமைப்பில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்வை ஒருங்கிணைத்து நடைமுறைபடுத்த பசுமை தோழி என்ற பணியிடம் நியமிக்கப் பட்டுள்ளது .

மேலும், மஞ்சப்பை பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி இயந்திரத்தை பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் எனவும் நெகழி இல்லா தமிழகத்தை உருவாக்க பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (திருப்பூர் வடக்கு) திரு.பாரதிராஜா, (திருப்பூர் தெற்கு) திரு.சத்தியன் மற்றும் பறக்கும் படை செயல் அலுவலர் திருமதி லாவண்யா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



# தமிழக அரசு பள்ளி கல்வித்துறை சார்பாக வருவாய் மாவட்ட அளவிலான சிலம்ப போட்டி 22 ஆகஸ்ட் 2025 இல் மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது

தமிழக அந்தஸ்து தொடர்ந்து 3 முறை பெற்ற சீனி ஆசான் சிலம்ப பள்ளி மாணவ மாணவிகள் 4 ஆவது முறை மாநில போட்டிக்கு தகுதி பெற்று சாதனை

சிவகங்கை, ஆக.26-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சீனி ஆசான் சிலம்ப பள்ளியை சார்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்டு ஒற்றைக்கம்பு பிரிவில் அகதீஸ்குமார், மதன்குமார், சுவாதி, ஷாலினி முதல் இடத்தையும், ஆதித்யா, ஹரிணி இரண்டாம் இடத்தையும், இரட்டைக்கம்பு பிரிவில் ரித்தீஷ், புகழேஷ், ரோஷினி, முதல் இடத்தையும், அரிபாலா, ஹர்ஷிதா இரண்டாம் இடத்தையும், தொடுமுறை பிரிவில் கரண், ஷெரோன் முதல் இடத்தையும், சூர்யா மூன்றாம் இடத்தையும் பெற்று தொடர்ந்து 3 முறை தமிழக அளவில் அந்தஸ்து பெற்று 4 ஆவது முறையாக மாநில சிலம்ப போட்டிக்கு தகுதி பெற்று பயின்று வந்த சீனி ஆசான் சிலம்ப பள்ளிக்கும், பயிற்சியாளர்கள் செல்வம் மற்றும் முனியாண்டி அவர்களுக்கும் பெருமை சேர்த்த மாணவ மாணவிகளையும் பெற்றோர்களும், பொதுமக்களும் வெகுவாக பாராட்டினர்.



# காட்பாடி, ஜாப்ராபேட்டை ஊராட்சியில் கனகவல்லி நேரு தலைமையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஆக.26-


வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, ஜாப்ராபேட்டை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், ஊராட்சி மன்ற தலைவர் கனகவல்லி நேரு தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் ஜாப்ராபேட்டை ஊராட்சியை சேர்ந்த சமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்கள் குறைகளுக்கான கோரிக்கை மனுக்களை வழங்கினர். இதில் காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், வருவாய் ஆய்வாளர் தமிழ்செல்வன், கிராம நிர்வாக அலுவலர் வெங்கடேசன் அனைத்து துறை சார் அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர். பொதுமக்களே விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்து கோரிக்கையை நிவர்த்தி செய்து, உரிய ஆவண ஆணையினை வழங்கினர்.



# விநாயகம் பில்டர்ஸ் அண்ட் கான்ஸ்ட்ரக்சன் நிறுவனர் விநாயகம் பிறந்தநாள் விழா

வேலூர், ஆக.26-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கிளித்தான்பட்டறை, விநாயகா பில்டர்ஸ் அண்ட் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவன தலைவரும், 5வது வட்டக் கழக திமுக செயலாளருமான பி.விநாயகம் பிறந்தநாள் முன்னிட்டு, 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் டீட்டா சரவணன் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர். இதில் தரணி மற்றும் நிர்வாகிகள் என பலர் வாழ்த்து தெரிவித்தனர்.



# கடையநல்லூர் நகர் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட நகர் மன்ற தலைவர் கோரிக்கை மனு

கடையநல்லூர், ஆக.26-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபிபுர் ரஹ்மான் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை மாண்புமிகு மா. சுப்பிரமணியன் அஅவர்களை குற்றாலம் அரசு விருந்தினர் மாளிகையில் நேரில் சந்தித்து அளித்த மனுவில் கூறியிருப்பதாவது

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் மொத்த 1,25,000 க்கும் மேல் மக்கள் வசித்து வருகிறார்கள் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன மக்கள் தொகை அடிப்படையில் இரண்டு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன 9 நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. இவற்றில் குமந்தாபுரம் மற்றும் இந்திரா நகர் பகுதியில் உள்ள நகர்புற துணை சுகாதார நிலையங்களை நகர்புற சுகாதார நல மையங்கள் அறிவித்து கடந்து ஜூன் 2023 முதல் அங்கு ஒரு மருத்துவர் செவிலியர் மற்றும் பணியாளர் நியமித்து மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர் இந்நிலையில் இக்பால் நகர் பகுதியில் புதிய நகர்புற துணை சுகாதார நிலையம் கட்டப்பட்டு அக்டோபர் 2024 முதல் செயல்பட்டு வருகிறது இப்பகுதியில் மக்கள் தொகை மிகவும் நெருக்கம் நிறைந்த பகுதியாகவும் இங்கு பொதுமக்கள் சார்பாக புதிய ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டிய அரசுக்கு விண்ணப்பம் செய்ததில் மக்கள் தொகை அடிப்படையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என தெரிவித்ததாக பொதுமக்கள் கூறுகிறார்கள் எனவே இக்பால் நகர் பகுதியில் அமைந்துள்ள நகர்ப்புற துணை சுகாதார நிலையத்தினை நகர்புற சுகாதார நல்வாழ்வு மையமாக அறிவித்து ஒரு மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம் செய்து தொடர்ந்து மருத்துவ சேவை பொதுமக்களுக்கு கிடைக்க செய்திட வேண்டுகிறேன். மேலும் மக்கள் தொகை நெருக்கமான இடங்களான மாவடிக்கால் (மந்தை) பகுதிகளிலும் மற்றும் பேட்டை பகுதியிலும் புதிதாக நகர்ப்புற நலவாழ் மையங்கள் அமைத்து மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம் செய்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த மனதில் தெரிவித்துள்ளார்.



# கம்பராமாயணத்தின் தலைமைப் பண்புகளை மாணவர்கள் பரப்ப வேண்டும் : கம்பன் கழகத் தலைவர் கோ.வி.செல்வம் பேச்சு

வேலூர், ஆக.26-

வேலூர் கம்பன் கழகத்தின் சார்பில் கவிச்சக்கரவர்த்தி கம்பரைப் பற்றிய கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.

இந்த விழாவிற்கு கம்பன் கழகத் தலைவர் கோ.வி.செல்வம் தலைமையேற்றார். விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதுடன், சிறந்த தமிழ் ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் பொற்கிழியும் வழங்கப் பட்டது. விழாவில் பேசினார் கம்பன் கழகத் தலைவர் கோ.வி.செல்வம் :

“கம்பராமாயணத்தில் தலைமைப் பண்பு, சான்றாண்மை, பேராண்மை, இறையாண்மை போன்ற தலைமைத் திறன்கள் குறித்து கம்பர் எடுத்துரைத்துள்ளார். இவை இன்றைய தலைமுறையினர் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள். கல்வி இருந்ததால் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்; பொறாமை, வறுமை, அறியாமை, பொய் ஆகியவை அக்காலத்தில் இல்லை என்று கம்பர் குறிப்பிடுகிறார். உண்மை நிலைத்திருந்ததால் பொய் நிலவவில்லை. வருங்கால சமூகம் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் கம்பர் முன்கூட்டியே சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்றைய இளைஞர்கள் கம்பரின் போதனைகளை பின்பற்றினால் அறியாமை அகலும்; மக்கள் மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வாழ்வார்கள். குறிப்பாக, கம்பரின் தலைமைப் பண்புகளையும் நற்குணங்களையும் பிறருக்குத் தெரிவிக்கும் முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டும்,” என்று அவர் வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் புதுச்சேரி கம்பன் கழகத் தலைவர் சிவக்கொழுந்து, பல்வேறு தமிழ் ஆர்வலர்கள், புலவர்கள் மற்றும் அறிஞர்கள் பங்கேற்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161